ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | பொதுப்படுகடன் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2023.09.14 |

**உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகை நிகழ்ச்சித்திட்டத்தை அனுசரித்து ஏற்றுக்கொள்ளப்பட்ட தகைமையுடைய திறைசேரி முறிகளை பன்னிரண்டு (12) புதிய கிரமமாகக் குறைவடையும் (Step-Down) கூப்பன் திறைசேரி முறிகளுக்கான பரிமாற்றுத் தீர்ப்பனவு**

2023 யூலை 04ஆம் திகதியிடப்பட்ட திறைசேரி முறி பரிமாற்ற விஞ்ஞாபனமானது (“**பரிமாற்ற விஞ்ஞாபனம்**), அதனைத்தொடர்ந்து, 2023 செத்தெம்பர் 12 அன்று திறைசேரி முறிகளைப் பரிமாற்றுவதற்கான அழைப்பின் பெறுபேறுகள் பற்றிய அறிவித்தல்களுடன் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் வெளியிடப்பட்டது. (இதில் பயன்படுத்தப்பட்ட ஆனால் வேறுவகையில் வரைவிலக்கணம் செய்யப்படாத சொற்பதங்கள் பரிமாற்று விஞ்ஞாபனத்திலுள்ள அத்தகைய சொற்களுக்கு வழங்கப்பட்ட பொருளைக் கொண்டுள்ளன.)

அதற்கமைய, குடியரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த செல்லுபடியான முன்வைப்புகளுக்கான வெளிநின்ற தகைமையுடைய முறிகள், பன்னிரண்டு (12) புதிய கிரமமாகக் குறைவடையும் (Step-Down) நிலையான கூப்பன்* திறைசேரி முறிகளாக விலைஈட்டு விகிதத்திற்கு பரிமாற்றுவதைத் தொடர்புபடுத்தி மாற்றம்செய்யப்பட்டன.

| ISIN** | தொடர்கள் | வழங்கல் திகதி | முதிர்வுத் திகதி | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (ரூ.மில்) |
|---|---|---|---|---|
| LKK00427C155 | 12%9%2027'A' | 15-03-2023 | 15-03-2027 | 267,038.5 |
| LKK00528D158 | 12%9%2028'A' | 15-04-2023 | 15-04-2028 | 267,038.5 |
| LKK00629E152 | 12%9%2029'A' | 15-05-2023 | 15-05-2029 | 267,038.5 |
| LKK00730F155 | 12%9%2030'A' | 15-06-2023 | 15-06-2030 | 267,038.5 |
| LKK00831A152 | 12%9%2031'A' | 15-01-2023 | 15-01-2031 | 267,038.5 |
| LKK00932B156 | 12%9%2032'A' | 15-02-2023 | 15-02-2032 | 267,038.5 |
| LKK01033C150 | 12%9%2033'A' | 15-03-2023 | 15-03-2033 | 267,038.5 |
| LKK01134D154 | 12%9%2034'A' | 15-04-2023 | 15-04-2034 | 267,038.5 |
| LKK01235E157 | 12%9%2035'A' | 15-05-2023 | 15-05-2035 | 267,038.5 |
| LKK01336F150 | 12%9%2036'A' | 15-06-2023 | 15-06-2036 | 267,038.5 |
| LKK01437A157 | 12%9%2037'A' | 15-01-2023 | 15-01-2037 | 267,038.5 |
| LKK01538B150 | 12%9%2038'A' | 15-02-2023 | 15-02-2038 | 267,038.5 |

* பரிமாற்று விஞ்ஞாபனத்தில் குறிப்பீடுசெய்யப்பட்ட புதிய முறிகளின் நிதியியல் நியதிகளுக்கமைவாக ஒவ்வொரு தொடரும் 2026இல் நிலுவையாக வருகின்ற முதலாவது ஆண்டுக்கு இருமுறைக் கூப்பன் கொடுப்பனவு உள்ளடங்கலாக ஆண்டுக்கு இருமுறை 12 சதவீத கூப்பனையும் அதன் பின்னர் ஆண்டுக்கு இருமுறை 9 சதவீத கூப்பனையும் (அதாவது 2026 மற்றும் அதிலிருந்து தொடங்குகின்ற 2ஆவது ஆண்டுக்கு இருமுறை கூப்பன் கொடுப்பனவு) பெற்றுக்கொள்ளும்.

** பன்னாட்டு பிணைய அடையாள இலக்கங்கள்